ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

பக்த ஹஸ்த பூஷணம்

ஸ்ரீ காமாக்ஷி அச்சுக்கூடம்,
காஞ்சீபுரம் - 3.

10—10—74 இதன் விலை 50 N. P.



பேரருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர்
திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எழுதிய

பக்தஹஸ்தபூஷணம்

இச்சிறு புத்தகம் நிகழும் ஆனந்தவஸ ஐப்பசிமீ முதல்தேதியிலிருந்து இவ்வருஷ பூர்த்திவரையில் ஸகல ஆஸ்திக பக்தர்களினுடையவும் ஹஸ்தத்தை அலங்கரித்திருக்கக்கூடவது. இதில் திவ்யதேசோத்ஸவ வைபவங்கள், மற்றும் ஆஸ்திகர்கள் உகந்து உணர வேண்டிய சாஸ்த்ரார்த்தங்கள் எல்லாம் எளிய நடையில் தெளிய அறிவிக்கப்பெறும். இதை ஒரு விலக்ஷண ஸ்ரீவைஷ்ணவ பஞ்சாங்கமாகக்கொள்க. இச்சிறுநூலை தினப்படியாக ஒருமுறை வாசித்து முடிப்பது நலம்.

தேவப்பெருமாள் திருவவதரித்த வரலாறு

முன்பு, நான்முகக் கடவுள் திருமாலைக் காணவேண்டித் தவங்கள் புரிந்தனன். ஆயினும், எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளில் நிலை கொள்ளாமல் வெவ்வேறு விஷய இன்பங்களில் பதறியோடுகின்ற தனது நெஞ்சை அடக்கியாளமுடியாமல் வருத்தங்கொண்ட அந்த நான்முகன் இன்னது செய்வதென்று தெளியப்பெருமல் திகைத்திருக்குமளவில் ஆகாயத்தில் நின்றும் ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது; அதாவது:—'பிரம! ஆயிரம் அச்வமேதங்களை அனுட்டித்தால்தான் சித்தசுத்தி பெற்றுத் திருமாலைக் கட்கூடாகக் காணப்பெறுவாய்; விரைவில் திருமாலைக் காணவேண்டி ஆயிரம் அச்வமேதயாகமனுட்டிக்கும் தாமதத்தைப் பொறுக்ககில்லாயாகில், தொண்டை நாட்டிலுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திற்குச் சென்று அவ்விடத்தில் அயமேத வேள்வியியற்றி எம்பெருமானை உகப்பிப்பாயாக; அங்கு ஒரு கருமம் செய்தாலும் அஃது ஆயிரமுகமாகிப் பயன் பெறுவிக்கும்; இஃது அந்த க்ஷேத்ரத்திற்கு உற்றபெருமை'-என்று. இந்த ஆகாயவாணியைக்கேட்டுப்பரமானந்தமடைந்த பிரமன் மேருமலையுச்சியில் நின்று உடனே எழுந்து ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து அங்குத் தவமுனிவர் சூழ்ந்த திருவநந்தஸரஸ்ஸையும் அதனருகில் திகழும் திருவத்திமாமலையையும் நோக்கியுவந்து அத்திருக்குளக்கரையிலேயே தூயவேள்விபுரியத் துணிவுகொண்டான். நினைத்தபோதே எதையும் அற்பு

தமாக நிருமித்து முடிக்க வல்லவனை விச்வகர்மாவையழைத்து, 'ஸ்ரீ ஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி இவ்விடத்திலேயே யாகசாலையை அமைத்திடுவாயாக; மணி மாடங்கள் சூழ்ந்தழகாயதொரு நகரத்தையும் நிருமிப்பாயாக' என்று கட்டளையு மிட்டனன். அப்போதே விச்வகர்மா ஸ்ரீ ஹஸ்திகிரியை நாற்சதுரமாக்கி அதனருகில் அச்வமேத யாகசாலையை அமைத்துத் *தடமாமதிள் சூழ்ந்தழகாய கச்சிப்பதி யையும் விரைவில் நிருமித்தனன். பிறகு வேள்வியைக்காண விருப்பத்துடன் வந்து சேர்ந்த அந்தரத்தமரர்கள் கூட்டங்களும் இயக்கரும் விச்சாதரரும் கின்னரரும் கந்தருவரும் முதலாயினோர் தந்தமக்குரிய விடுதிகளில் சார்ந்தனர். இந்திரன் முதலிய தேவர்களாலும், விச்வாவஸு முதலிய கந்தருவர்களாலும், விரோசனன் முதலிய அசுரர்களாலும், மணிபத்ரன் முதலிய யக்ஷர்களாலும், வஸிஷ்டர் முதலிய மாமுனிகளாலும் அரம்பை முதலிய அப்ஸரஸ்ஸுக்களாலும், ஜநகன் முதலிய சக்ர வர்த்திகளாலும் மற்றும்பல்வேறுபெரியார்களாலும்நெருக்கமுற்றதுகாஞ்சிமாநகர்.

பின்னர், யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்கள் சேகரிக்கப்பட்டு, ரித்விக்குக் களும் திரண்டனராக, வேள்விபுரிய ஸஜ்ஜனாய் நின்ற விரிஞ்சனை நோக்கி ப்ருஹஸ் பதியானவர், 'திசைமுகனே! உனது தருமபத்தினியான ஸரஸ்வதியின்றி வேள்வி நடைபெறாதாதலால் அவளை இங்கு அழைக்க முயல்வாய்' என்றனர். பிறகு பிரமன் வஸிஷ்டமுனிவனை நோக்கி முன்பொருகால் ஏதோவொரு காரணத்தினால்

என்மீது கறுக்கொண்ட ஸரஸ்வதியானவள் ஸரஸ்வதீநதியைச் சென்று சேர்ந்து அங்குத் தவம்புரிந்துகொண்டிராநின்றாள்; அவளை நீ இப்போது நல்வார்த்தை களினாலுகப்பித்து இங்கழைத்துவரவேணும்' என்றனன். அக்கட்டளையைச் சிரமேற் கொண்ட வஸிஷ்டமாமுனிவன் ஸரஸ்வதீ தீரத்திற்கு விரைந்துசென்று வாணியை வணங்கித் துதித்து, 'தாயே! காஞ்சிமாநகரில் அச்வமேத வேள்வியியற்ற விரும்பிய அம்புயத்தோன் உமது நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றாராதலால் ஆங்கு விரைந்து எழுந்தருளவேணும்; ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தில் அந்த வேள் வியை நீர் குறையற நிறைவேற்றி யருளவேணும்' என்று கைகூப்பிக் கூறினன். இது கேட்டதும் மிக்க சினங்கொண்ட ஸரஸ்வதியானவள் பழைய மனஸ்தாப ஹேதுக்களைச்சொல்லி இப்போது நான் வரமுடியாதென்றுரைக்க,வஸிஷ்டர்மீண்டு வந்து நான்முகனிடம் செய்தியறிவித்தார். அதனை யுணர்ந்த ஸகல மஹர்ஷிகளும் நான்முகக்கடவுளை நோக்கி, 'ஸரஸ்வதி இங்கு வரப்போகிறதில்லை யென்பதறிந் தோம்; அதனால் ஒரு குறையுமில்லை; ஸாவித்ரி முதலிய மற்றை மனைவியரை உடன் கொண்டு வேள்வி தொடங்கி முடிப்பது நலம்' என்றனர். அங்ஙனமே செய்வதாக இசைந்த திசைமுகனார் ஸாவிததிரி முதலிய மனைவியருடன் கூடி யஜ்ஞஸங்கல்பஞ் செய்து கொண்டு அச்வமேத தீக்ஷையை வஹித்துக்கொண்டார். வேள்வியதிசயங் களைக் காணவந்து குழுமியிருக்கின்ற தேவாஸுரர் முதலிய அனைவர்க்கும் தக்க

வாறு மரியாதை செய்ய அந்தணர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அவ்வண்ணமே ஸத்காரம் செய்ய எழுந்து தகுதிநோக்கித் தேவர்களுக்கு முதல் மரியாதை செய்தனர். அதுகண்டு பொறாமை கொண்ட அசுரர்கள் உடனே ஸதஸ்ஸில் நின்று எழுந்து வெளியேறி, அமரர்களை அவமதிக்கவெண்ணி அமர்புரிய ஆலோசிக்கலாயினர். போர்புரிவதே பொருத்தமானதென்று துணிந்த அவ்வசுரர்களை நோக்கி அவர்களில்தலைவனானவிரோசனனென்பான்சிறிதுவிமர்சித்துஇங்ஙனம்விளம்பினான்-"அசுரர்காள்! மேல்விளைவதறியாமல் நீங்கள் சடக்கெனச் செய்யத்துணிந்த இந்த யுத்தஸந்நாஹத்தை நிறுத்திக்கொள்வது நன்று; விரைந்து விளக்கிலே விழும் விட்டில்களுக்கு நேரும் கதிதான் நமக்கும் நேரும்; பிறருடையவும் நம்முடையவும் பலாபலங்களை ஆராயாது திடீரென்று போர்புரியப் புகுவது பெருந்தீங்காகவே முடியும்; எளிய உபாயத்தினால் ஸாதிக்கத் தகுந்ததைப் பராக்ரமத்தினால் ஸாதித்துக்கொள்ளக் கருதுவது புத்திமான்களின் பணியல்ல; இப்போது எனக்குத் தோன்றுவதொரு உபாயத்தை உரைக்கின்றேன் கேண்மின்; இந்த நான்முகக்கடவுள் தனது மூத்த மனைவியாகிய ஸரஸ்வதியைத் துறந்து வேள்வியியற்றத் தொடங்கியிருக்கின்றமையால் நாம் ஸரஸ்வதியிடம் சென்று சினமூட்டி அவளைக்கொண்டு வேள்வியைக் கெடுத்தல் மிக எளிதாகும்''—என்று. இதுகேட்ட அசுரர்களனைவரும் நன்று நன்

2

றென்று நவின்று அப்பொழுதே புறப்பட்டு ஸரஸ்வதி பக்கலிற் சென்று, தங்களுக்குள்ள மாயச்செயல் வல்லமையினால் அசுரவுடல் நீத்து அந்தணவேடம் பூண்டு வாணியை வாயாரவாழ்த்தி நின்றனர். அவ்வாழ்த்துதலால் அகமகிழ்ந்த அவள், நீங்கள் வந்த காரியமென்னென்று வினவ, தங்களுக்கு ஸதஸ்ஸில் அவமரியாதை நடந்ததென்பதைச் சிறிதும் வெளியிடாமலே இங்ஙனம் மொழிந்தனர்;—"மேன்மை தங்கிய கலைமகளே! தீய மதி கொண்ட சிலமுனிவர்களால் தூண்டப்பட்ட உமது கணவன் முக்கிய மஹிஷியான உம்மைத் தவிர்த்து மற்றை மஹிஷிகளோடு கூடி யாகம் செய்யத் தொடங்கியிருக்கின்றனன்; மிகவும் அநீதியான இந்தச்செய்தியை நாங்கள் பொறுக்ககில்லோம்; இதனை உம்மிடத்து விண்ணப்பஞ் செய்யவே வந்தோம்; எவ்வகையினாலாவது அந்த வேள்வி நடைபெறாத வண்ணம் தடை செய்தீராகில் உம்மிடத்து அன்புபூண்ட எமக்கு மகிழ்ச்சியாகும்''—என்று.

இதுகேட்ட ஸரஸ்வதி அடக்கவொண்ணாத சீற்றத்தை யேறிட்டுக்கொண்டு, நான்முகனார் செய்யும் நல்வேள்வியைப் பங்கம் செய்யப்பாரித்து, ஸஹ்யமலையினின்று கிளம்பி வேகவதியென்னும் • நதியாகப்பெருகி ஸத்யவ்ரதக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தனள்: அந்த நதியின் பெருக்கு பயங்கரமான விசையுடனே பெருகிவருகின்ற பெருவெள்ளமானதைக்கண்ட யாகசாலையிலுள்ளாரனைவரும் திடுக்கிட்டு இன்னது செய்வதென்று தோன்றாமல் மிகவும் வியாகுலப்பட்டனர். 'ஸ்வாஹா

ஸ்வாஹா' என்று சொல்லிக்கொண்டிருந்த வாசகங்கள் 'ஹாஹா ஹா ஹா' என்று மாறிவிட்டன. வேள்வி காணவந்த ஸகல ஜனங்களும் வருந்தியேங்கி யஜமானனாகிய நான்முகனைத் தஞ்சமாக அடைந்து "எம்மைக் காத்தருளவேணும், எம்மைக் காத்தருளவேணும், என வேண்டிக்கொண்டவளவிலே, பிரமன் யோகத்ருஷ்டியினால் 'அசுரர்களால் கலக்குண்ட ஸரஸ்வதியின் செயல் இது' என்றுணர்ந்து, ஸ்ரீமந்நாராயணனது திருவருளாலேயே இப்பெருந்துயரம் தொலையவேணுமென்று துணிந்து உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து உடம்பெலாம் கண்ணநீர்சோர அப்பெருமானைக் குறித்து வாயாரத் தோத்திரஞ்செய்ய, அந்தத் தோத்திரத்தினால் மிகவும் திருவுள்ளமுவந்த எம்பெருமான், ஏற்கெனவே உபநிஷத்துக்கள் தன்னை ஸேதுவாக ஓதியிருப்பது பொருள்பெற்றதாம்படி, "சதுமுகனார் வேள்விதனைச் சதிர்கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கணையாக வந்துதித்தோய்!" என்றும், "அணியாக வேகவதி அலையோடு கொண்டோடி ஆலிக்க அணையாக் கிடந்த களைதானே" என்றும் ஏத்துமாறு அந்த ஸரஸ்வதியின் வெள்ளத்தைத் தடைசெய்யவல்ல அணையாக சயனித்துக்கொண்டருளினன். அந்தத் திருப்பள்ளித் திருக்கோலத்தைக் கண்ட ஸரஸ்வதி நாணமுற்று மேலே பெருகிச் செல்லமாட்டாமல் திகைத்து நின்றனள். பிரமனும் மற்றுமுள்ள மஹர்ஷிகளும் எம்பெருமானுடைய திருவருளை நோக்கி மிக வியந்து வாயார வாழ்த்தி வணங்கி நின்றனர். நதியுருவாக வந்த ஸரஸ்வதியும் அவ்வளவிலே தனது ஆர்ப்பாட்டங்களெல்லாம் அடங்கப்பெற்று எம்பெருமானுடைய நியமனத்தினால் அந்தர்வாஹினியாய்ச்சென்று கடல் சேரலுற்றாள்.



யதோக்தகாரி யென்று திருநாமம் பூண்ட அப்பெருமானது தென்புறமாகச் செல்லலுற்ற வேகவதியை வஸிஷ்டர் முதலியமுனிவர்கள் பிரமனது சொற்படி வந்து வணங்கி, "தாயே! ஸரஸ்வதியே! யாகசாலையில் இனியாகிலும் வந்து சேர்ந்து நாதரோடு கூடிக் களித்திருந்து இப் பெருவேள்வியை நிறைவேற்றியருள வேணும்" என்று வேண்டிக்கொள்ள, அவளும் நதியில் நின்றும் விரைந்தெழுந்து நான்முகக் கடவுளோடு சேரலுற்றாள்.

அச்வமேதயாகத்திற்கு உண்டான இடையூறு தொலைந்து ஸரஸ்வதியும்

வந்துசேர்ந்து ஒருகுறையுமின்றி வேள்வி நடைபெறுவதாயிற்று. நிபுணரான
வஸிஷ்டர் வேள்விச்சடங்குகளைக் குறையொன்றுமின்றியே அடைவுபட நடை
பெறுத்திப் போந்தனர். ப்ராப்தமான காலத்தில் வேள்விக் குதிரையின் வபையை
யெடுத்து அக்நியில் ஹோமம் செய்தவளவில், மங்கல வாத்தியங்கள் முழங்காநிற்க.
வேதகோஷம் விம்மி வளராநிற்க, விண்ணுலகில் நின்றும் பூமாரி சொரியாநிற்கப்
பரம பவித்திரமான புண்யகோடி விமானம் அக்நிமத்தியில் நின்றும் தோன்ற,
அந்த விமானத்தினுள்ளே பேரருளாளப்பெருமானென்னும் ஸ்ரீவரதராஜன் *கோல
மாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில் நீலமேனியனுய் ☼மின்னு
நூலும் குண்டலமும் மார்வில் திருமறுவும் மன்னுபூணும் நான்கு தோளுமுடைய
னுய் ☼சங்கினேடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவா
யொன்றினேடுங் கூடினவனுய் ☼பூந்தண்மாலைத் தண்டுழாயும் பொன் முடியும்
வடிவும் பாங்கு தோன்றும் பட்டும் நாணுமாய் ☼தொக்கசோதித் தொண்டை
வாயும்நீண்ட புருவங்களும் தக்கதாமரைக் கண்களுமாய் ☼குழுமித் தேவர் குழாங்
கள் கைதொழச் சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு வென்னலாம்படி
நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன்மேனியோடே☼ தோளிணைமேலும்
நன்மார்பின்மேலும் சுடர் முடிமேலும் தாளிணைமேலும் புனைந்ததண்ணந்துழாய்

மாலையனுய்க் காட்சி தந்தருள, அந்தஸேவையை நான்முகனுள்ளிட்டாரடங்கலும்
கண்டு ஆனந்தமென்னும் அமுதக்கடலில் ஆழ மூழ்கினர்.

ஆக இவ்வளவும் புராணவரலாறு; திவ்யதேசங்களுக்கு ஏற்றம் ஆழ்வாரா
சாரியர்களின் ஈடுபாட்டினுல்தான் முக்கியமாகும். இந்த ஹஸ்திகிரிக்கு ஆளவந்தார்
தொடங்கி மணவாளமாமுனிகள்வரையிலுமுள்ள ஆசாரியர்களின் ஈடுபாடும், ஆழ்
வார்களில், பூதத்தார், நம்மாழ்வார், திருமங்கைமன்னன் ஆகிய இம்மூவரின் பாட
லும் ப்ரஸித்தமாகவுள்ளது. முந்துறமுன்னம் ஆழ்வார்பாடலின் விவரணம்தெரிவிப்
போம். பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில் ☼உலகேத்துமாழியானத்தியூரான்*
அத்தியூரான் புள்ளையூர்வான் என்னுமிரண்டு பாசுரங்களினுல் மங்களாசாஸனம்
செய்தருளினுர். அத்தியூரான் என்றது ஹஸ்திகிரிநாதன் என்றபடி. இராமானுச
நூற்றந்தாதியில் எம்பெருமானுர்க்குத் தேவப்பெருமாளிடத்திலுள்ள பக்தியை
யெடுத்துக்கூறும் அமுதனுர் ☼தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளனி
ராமானுசன்* என்றுபணித்தது கொண்டும் இதனையுணரலாம். அடுத்தபடி நம்
மாழ்வார் திருவாய்மொழிதொடக்கத்திலேயே ☼அயர்வறு மமரர்களதிபதி* என்று
தொடங்கி (முதற்பத்தின் முடிவில்)☼மணியை வானவர்கண்ணனை* என்று தேவாதி
தேவனையே பேசித்தலைக்கட்டினுர். இதையுட்கொண்டே நிகமாந்த மஹாகுரு *ப்ர
தம சதகே வீக்ஷ்ய வரதம்☼ என்று பணித்தார். அடுத்தபடி திருமங்கையாழ்வார்

(2-9-3) *வரந்தரு மாமணிவண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி* என்று வரதன் என்கிற திருநாமத்தையிட்டே பாடினார். இங்கு முக்கியமான குறிக்கோள்; காஞ்சீ என்ற வடசொல்லே தமிழில் கச்சி யெனத் திரிந்தது. *க இதி ப்ரஹ்மணா நாம தேந தத்ராஞ்சிதோ ஹரி:, தஸ்மாத் காஞ்சீதி விக்யாதா புரீ புண்யவிவர்த்திநீ* என்ற புராணவசனப்படியே பிரமன் ஆராதித்தவிடம் என்பதுபற்றியே காஞ்சீ என்று பெயரானபடியால் அதன் திரிபாகிய கச்சி யென்கிற சொல் வருமிடங்கள்யாவும் ஹஸ்திகிரிமங்களா சாஸன மென்று கொள்ளத்தகும்.

இதற்கு மேல் ஆசாரியர்களின் ஈடுபாடு பற்றிச் சொல்லுகிறேன். ஆளவந்தார் எம்பெருமானாரைக் கடாக்ஷிக்க இங்கேயெழுந்தருளினபோது *யஸ்ய ப்ரஸாத கலயா பதிர: ச்ருணோதி பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்தி மூக:, அந்த: ப்ரபச்யதி ஸுதம் லபதே ச வந்த்யா தம் தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி* என்று முக்தகமருளிச்செய்தார். அடுத்தபடி திருக்கச்சிநம்பிகள் தேவராஜாஷ்டகமருளிச் செய்தார். அது அனைவர்க்கும் கண்டபாடம்.

திருக்கச்சி நம்பிகளுக்கடுத்தபடி, கூரத்தாழ்வான் நூறுச்லோகங்கள்கொண்ட வரதராஜஸ்தவமருளிச் செய்தார். அதில் ஸாரமாக ஒருச்லோகத்தை மட்டும் கேண்மின்; எம்பெருமான் அவதாரங்கள்செய்தருளுகிறானென்பதை வேதங்களும் பகவத்கீதையும் மற்றும் பல இதிஹாஸபுராணங்களும் சொல்லியிருக்கச் செய்தே

யும் ப்ரஹ்மஸூத்ரமென்கிற சாரீரகமீமாம்ஸை அவதார ப்ரஸ்தாவமே செய்யவில்லை; அக்குறைதீர ஆழ்வார்கள் தமது திவ்யப்ரபந்தங்களிலே பரக்கப் பேசிவைத்தார்கள்; அவதாரகாரணத்தையும் ஆழ்ந்து அருளிச்செய்தார்கள். அதைக் கூரத்தாழ்வான் இந்தஸ்தவத்தில் ஒருசுலோகத்தினால் அற்புதமாகவருளிச் செய்திருக்கிறார். ''அநாப்தம் ஹ்யாப்தவ்யம் ந தவ கில கிஞ்சித் வரத! தே, ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரலயவிதயோ தீவிலஸிதம்; ததாபி க்ஷோதீயஸ்ஸுர நரகுலேஷ் வாச்ரிதஜநாந் ஸமாச்லேஷ்டும் பேஷ்டும் ததஸுகக்ருதாஞ்சாவதரஸி.'' இதன் கருத்தின் சுருக்கமாவது—'தேவப்பெருமாளே! தேவரீர் அவாப்தஸமஸ்தகாமர்! இதுவரையில் கிடைக்காததாய் இனிமேல் கிடைக்கவேண்டியதாக ஏதுமில்லை தேவரீருக்கு; ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களாகிற காரியங்களையும் ஸங்கல்பமாத்ரத்தாலே நிர்வஹித்தருளாநின்றீர்; *நாட்டில் பிறந்துபடாதனபட்டு* என்றுஆழ்வார் அருளிச்செய்கிறபடி பல்வகைக்கஷ்டங்களையும்படவேண்டும்படியாகஏதுக்கு இவ்விருள்தருமாஞாலத்திலே அவதரிக்கவேண்டும்! அவதரித்துப்பெறவேண்டியபேற்றை ஸங்கல்பமாத்திரத்தாலே பெறலாமே! என்று தேவப்பெருமாளைக் கேட்க, அதற்குப் பெருமாள் கூறியவிடையை ஸ்வோக்தியாலே அருளிச்செய்கிறார் [ஆச்ரித ஜநாந் ஸமாச்லேஷ்டும், ததஸுகக்ருதாம் பேஷ்டுஞ்ச அவதரஸி] என்று. மெய்யடியார்களைத் தழுவி முழுசி மகிழவேணுமென்றும், அவ்வடியார்களின்

விரோதிகளைத் தன் சீற்றந்தீரத் தன்கையாலே சித்ரவதம் பண்ணித் தொலைக்க வேணுமென்றும் ஆசைகொண்டா னெம்பெருமான்; இவ்வாசை ஸங்கல்பத்தினல் தீராதாகையால் இவ்வாசை நிறைவேறுவதற்காகவே அவதரிக்கவேண்டியதாயிற்று என்றபடி.

கூரத்தாழ்வானுக்கடுத்தபடி துதித்தவர் நிகமாந்த மஹா குரு. அவர் பணித்த வரதராஜ பஞ்சாசத்தில் ஒரு ச்லோகத்தின் பொருள் கேளீர்; கீழே விவரித்த ஆழ்வான் ச்லோகத்தில் எம்பெருமான் ஸங்கல்பத்தாலே ஸாதித்துக்கொள்ள முடியாததொன்று சொல்லப்பட்டது. ஸங்கல்பத்தாலேயே ஸாதிக்கவேண்டியதாக தேசிகன் கூறுவதைக் கேளீர்.

''கிம் வா கரீச! க்ருபணே மயி ரக்ஷணீயே
தர்மாதி பாஹ்ய ஸஹகாரி கவேஷணே ந?
நந்வஸ்தி விச்வபரிபாலநஜாகரூக:
ஸங்கல்ப ஏவ பவதோ நிபுணஸ் ஸஹாய:.''

(இதன்கருத்தாவது) பேரருளாளப் பெருமாளே! கர்மஜ்ஞாநபக்திகளிலே அந்வய முடையாரையே தேவரீர் காத்தருள்வதாக விரதங் கொண்டிருப்பதால் அகிஞ்சநனை அடியேனிடத்தில் அவையேதேனு முண்டோவென்று தேடிப் பார்க்கக்கூடும்; எத்தனை நாள் தேடிப்பார்த்தாலும் அவையொன்றும் கிடைக்கவிரகில்லை. ☆விநத விவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே☆ என்ற ரக்ஷணஸங்கல்பம்

தேவரீரிடத்து வலிதாயிருக்க, அதனையே கொண்டு காரியம் செய்யலாயிருக்க, இல்லாதவற்றைத் தேடி ச்ரமப்பட வேண்டா என்றுராயிற்று. உண்மையில் இது தானே சாஸ்த்ரார்த்தம். இத்தால் நாம் ஒன்றும் செய்யவேண்டா என்றபடியன்று; ஏதோ சைதந்யக்ருத்யமாக நாம் செய்கிறோ மத்தனை; இவையொன்றும் கார்யகரமன்று; பேற்றுக்கு உபாயம் அவன்றன் ஸஹஜகருணையொன்றே—என்கிற சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டதாயிற்று. தேசிகனுக்குப் பிறகு,

மணவாளமாமுனிகள் ஸாதித்தருளின தேவாதிராஜமங்களமென்கிற மங்களாசாஸனஸ்துதி கேண்மின்;—

(தனியன்) யச் சக்ரே தேவராஜஸ்ய மங்களாசாஸநம் முதா,
தம் வந்தே ரம்யஜாமாத்ருமுநிம் விசதவாக்வரம்.

1. மங்கலம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே,
வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம்.
2. வாஜிமேதே வபாஹோமே தாதுருத்தரவேதித:,
உதிதாய ஹுதா தக்நேருதாராங்காய மங்களம்.
3. யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாநமுகச்ரியே,
தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம்.
4. வாரிதச்யாமவபுஷே விராஜத்பீதவாஸஸே,
வாரணாசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம்.

5. அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே,
ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம்.

6. திவ்யாவயவஸௌந்தர்யதிவ்யாபரணஹேதயே,
தந்தாவளகிரீசாய தேவராஜாய மங்களம்.

7. புருஷாய புராணாய புண்யகோடி நிவாஸிநே,
புஷ்பிதோதாரகல்பத்ருகமநீயாய மங்களம்.

8. காஞ்சநாசலச்ருங்காக்ர காளமேகாநுஸாரிணே,
ஸுபர்ணும்ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம்.

9. போகாபவர்க்கயோரேகம் வாஞ்சத்ப்யோ தததே த்வயம்,
ஸ்ரீமத்வரதராஜாய மஹோதாராய மங்களம்.

10. மதங்கஜாத்ரிதுங்காக்ரச்ருங்கச்ருங்காரவர்ஷ்மணே,
மஹாக்ருபாய மத்ரக்ஷாதீக்ஷிதாயாஸ்து மங்களம்.

11. ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே,
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்.

12. அஸ்து ஸ்ரீஸ்தநகஸ்தூரீ வாஸநாவாஸிதோரஸே,
ஸ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம்.

13. மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:,
ஸர்வைச் ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்.

ஐப்பசி மாதச் சிறப்பு.

மாதங்களுக்குள் எந்த மாதம் சிறந்தது? என்று பார்க்குமளவில், ஒவ்வொரு காரணத்தினுல் ஒவ்வொரு மாதமும் சிறந்ததென்றே கொள்ளத்தக்கதாயிருக்கும். எம்பெருமானுர் திருவவதரிக்கப்பெற்றதனுலே சித்திரை மாதம் சிறந்தது; நம்மாழ்வார் திருவவதரிக்கப் பெற்றதனுலே வைகாசிமாதம் சிறந்தது ......என்றிவ்வாறு ஒவ்வொரு மாதத்திற்கும் சிறப்புச் சொல்லலாமன்றே. தாழ்வாக எந்த மாதத்தையும் சொல்லுவதற்கில்லை. ஆனுலும் ஐப்பசி மாதத்திற்கே ஒப்புயர்வற்ற சிறப்பு உள்ளதென்று சொல்லலாம். நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர்களான மஹாபுருஷர்களின் திருவவதாரத்தின் உபக்ரமத்திற்கும் உபஸம்ஹாரத்திற்குப் இம்மாதமேயன்றே மூலமாயிருக்கின்றது. ஆழ்வார்களில் முதல்வராய் முதலாழ்வார்களென்று சிறப்பித்துக் கூறப்படுமவர்களான பொய்கை பூதம் பேயாழ்வார்களேயன்றே நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயத்திற்கு மூலகந்தமானவர்கள். இந்த ஸத்ஸம்ப்ரதாயத்தை வளர்த்துப்போந்த ஆசாரியர்களில் கடைக்குட்டியானவர் மணவாளமாமுனிகள். ஆக ஆழ்வார்களில் தலைவர்களும், ஆசாரியர்களில் சரமராயிருக்கச் செய்தேயும் தலைவரென்றே உலகம் போற்றத்தக்கவராயிராநின்ற மணவாள மாமுனிகளும் திருவவதரிப்பதற்கு மூலமான இம்மாதமே மிகச் சிறந்ததென்று கொள்ளுதல் சாலச்சிறக்கும். இன்னமுங் கேளீர்;

மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலை யில் "அந்தமிழால் நற்கலைகளாய்ந்துரைத்த வாழ் வார்கள், இந்த வுலகிலிருள் நீங்க வந்துதித்த மாதங் கள் நாள்கள்தமை மண்ணுலகோர் தாமறிய, ஈதென்று சொல்லுவோம் யாம்" என்று பிரதிஜ்ஞை பண்ணி அருளிச் செய்யத் தொடங்குகையில் "ஐப்ப சியிலோணமவிட்டம் சதயமிவை" என்று ஐப்பசி மாதத்தை முன்னிட்டே அருளிச் செய்து வருகிறார். முதலாழ்வார்களின் அவதார நாட்களை யருளிச் செய்தவுடனே கிரமமாக, திருமழிசைப்பிரான், நம் மாழ்வார், குலசேகராழ்வார்......என்று இவர்களின் அவதாரம் அருளிச் செய்யப்பட்டிருக்குமானால் ஆழ் வார்களின் அவதார க்ரமத்தை யுத்தேசித்து ஐப்பசி யை முதலிலே தொடங்கினரென்னலாம். அப்படி யில்லை. ஆழ்வார்களின் அவதாரக்ரமத்தில் நாள்பாட் டுக்கள் பணிக்கப்பட்டிருக்கவில்லை. ஐப்பசி, கார்த் திகை, மார்கழி, தை, மாசி......என்றிப்படி மாஸக்ர மேணவே பணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஐப்பசி மாதத்தின் சிறப்பு அம்மாதத்தில் திருவவ தரித்த மணவாளமாமுனிகளின் திருவுள்ளத்தில் குடி கொண்டிருக்கின்றதென்பது விளங்கிற்று. முதலாழ் வார்களின் திருவவதாரமுமேஇச்சிறப்புக்கு அடி.

— ஸ்ரீபாஷ்யத்தில் ஒரு பெரிய விசேஷம் —

எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்ய மங்கள ச்லோகத் தில் முதலாழ்வார்கள் மூவருடையவும் திருநாமங் களை க்ரமேண மூன்றுபாதங்களிலும் விந்யஸித்தருளி யிருக்குமழகு நோக்கத்தக்கது. எங்ஙனே யென்னில்; முதல்பாதத்தில் 'புவநஜந்ம' என்பதனால் பொய்கை யாழ்வார் தெரிவிக்கப்படுகிறார். அமரகோசத்தில் ஜலத்திற்குப் பர்யாயமான பதங்களை "ஆபஸ்ஸ்தீரீ பூம்நி வார்வாரி" என்று தொடங்கிஅடுக்கிவருகையில் "ஜீவநம் புவநம் வநம்" என்று புவநசப்தத்தையும்

சேர்த்திருக்கையாலும், இங்ஙனே ஸகல கோசங்களிலும் ஜலவாசகமாகவும் புவநசப்தம் படிக்கப்பட்டிருக்கையாலும் (புவநம்) என்பதற்கு ஜலம் என்னுமர்த்தம் ஸம்ப்ரதிபந்நம். "புவநாத் ஜந்ம யஸ்ய ஸ: புவநஜந்மா" என்று கொண்டு பொய்கையினின்றுமவதரித்த பொய்கையாழ்வாரை ஸ்மரிக்கக் குறையில்லை. இது முத்ராலங்காரப்ரக்ரியை. ஆகவே, ப்ரக்ருதச்லோகத்தில் இவ்வர்த்தத்திற்கு ப்ரஸக்தியுண்டோ வென்கிற கேள்விக்கு இடமில்லை. இனி இரண்டாவது பாதத்தில் "விநதவிவித பூதவ்ராதரக்ஷைகதீக்ஷே" என்றவிடத்து பூதசப்தத்தினுல் பூதத்தாழ்வாருடைய திருநாமம் ஸ்பஷ்டமாகவே தெரிவிக்கப்பட்டது. பேயாழ்வாரென்பதற்குப் பெரியஆழ்வாரென்று பொருள். ஆனதுபற்றியே *பூதம் ஸரச் ச* என்ற ச்லோகத்தில் [மஹதாஹ்வய] சப்தத்தினுல் பேயாழ்வாரைக் குறித்தார் பட்டர். "பூதம் சிரோஹ்ரத மஹாஹ்வய மக்ஷியுக்மம்" என்கிற ச்லோகமும் காண்பது. ஆக, மங்களச்லோகத்தின் மூன்ருவது பாதத்தில் (ப்ரஹ்மணி) என்றதனுல் பேயாழ்வார் தெரிவிக்கப்பட்டவராகிருர். "ஸர்வத்ர ப்ருஹத்த்வகுணயோகேந ஹி ப்ரஹ்மசப்த:" என்கிற ஸ்ரீபாஷ்ய ஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம். ஆக, ஸ்வாமி யெம்பெருமானுர் முதலாழ்வார்கள் மூவரையும் இங்ஙனே அநுஸந்தானம்செய்துகொண்டே ஸ்ரீபாஷ்யமுபக்ரமித்தருளினு ரென்பது விளங்கிற்று. ச்லோகம் முழுமைக்கும் நம்மாழ்வார் பரமான அர்த்தத்தை த்ரமிடோபநிஷத்ப்ரபாவ ஸர்வஸ்வத்திலே விளக்கி யிருக்கிறேன்; அங்கே கண்டுகொள்வது.

ஆனந்தஶ்ரீ ஐப்பசிமீ உத்ஸவாதிகள்

கீழ் புரட்டாசி 26௳ சனி, ஏகாதசி (12-10-74) முதல் மணவாளமாமுனிகளுத்ஸவம் நடைபெற்று வருவதால்

1௳ வெள்ளி 7-வது திருநாள்; நவராத்ரி நாலாவது உத்ஸவம். திருவிசாகம் *(18—10—74)*.

4௳ திங்கள் (மாமுனிகள்) சாத்துமுறை நவராத்ரி *8.* *(21—10—74)*.

5௳ செவ். இயற்பா சாத்துமுறை, ஸேனை முதலியார் சாத்துமுறை.

6௳ புதன் நவராத்ரி *9*

7௳ வியா. மஹா நவமி, பொய்கையாழ்வார், பிள்ளை லோகாசாரியர் சாற்றுமுறை.

8௳ வெள்ளி. விஜயதசமி, பூதத்தாழ்வார் சாற்றுமுறை.

9௳ சனி. பேயாழ்வார் சாத்துமுறை.

12௳ செவ். ரேவதி மாமுனிகள் விடாயாற்றி சாற்றுமுறை.

14௳ வியா. பௌர்ணமி.

16௳ சனி. நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.

17௳ ஞாயிறு பெரியவாச்சான்பிள்ளை ,,

19௳ செவ். எம்பெருமானார் ,,

24௳ ஞாயிறு ஏகாதசி.

25௳ திங்கள் ஹஸ்தம்.

27௳ புதன் தீபாவளி (13-11-74) தர்ப்பண அமாவாசை.

28௳ வியா. அமாவாஸ்யை, திருவிசாகம்

ஸேனைமுதலியார் பெருமை.

ஸ்ரீ விஷ்வக்ஸேனரைப் போற்றுகின்ற பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *ஸ்ரீரங்க சந்த்ரமஸமிந்திரயாவிஹர்த்தும் விந்யஸ்ய விச்வசிதசிந் நயநாதிகாரம், யோ நிர்வஹத்யநிச மங்குலி முத்ரயைவ ஸேநாந்யமந்யவிமுகாஸ் தம் அசிச்ரியாம.* என்கிற சுலோகத்தினுல்–இவர்பக்கலிலேயே ஸகலலோக ஸம்ரக்ஷண பாரங்களை யெல்லாம் எம்பெருமான் வைத்திருப்பதாக வருளிச்செய்கிறுர். எம்பெருமானும் "ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே ந்யஸ்தஸமஸ்தாத்மைச்வர்யம" என்றருளியுள்ளார். வேதாந்தவாசிரியரும் *வந்தே வைகுண்ட ஸேநாந்யம்...யத்வேத்ர சிகரஸ்பந்தே விச்வமேதத் வ்யவஸ்திதம்* என்று யதிராஜ ஸப்ததியில்) பணித்தார். இப்படியிருக்க, கூரநாராயணஜீயர் பணித்த ஸுதர்சந சதகத்தில் *யஸ்மிந் விந்யஸ்ய பாரம் விஜயிநி ஜகதாம்* என்கிற சுலோகத்தில் திருவாழியாழ்வான் பக்கலிலே ஸகல லோக ஸம்ரக்ஷண பாரங்களை வைத்திருபபதாகச் சொல்லியிருக்கிறதே, இரண்டும் எங்ஙனே பொருந்துமென்னில்; ஒரு குறையுமில்லை. நம்மாழ்வார் திருவிருத்தத்தில் *அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும், இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்* என்றருளிச்செய்திருப்பதுண்டே, அஷ்டதிக்பாலகர்களு முண்டே. கீதையில் *நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே* என்று அவன் தானே அளவுகடந்ததாகச் சொன்ன தனது விபூதிப் பரப்புக்கு எத்தனை ரக்ஷகர்களு மிருக்கலாமே! ...

மணவாளமாமுனிகள் வைபவச் சுருக்கம்

திருவாய்மொழியில் (2-2-3) ஆழ்வார் *ஏறனைப் பூவனை* என்கிறபாட்டில் *மாறனில்மிக்குமோர்தேவு முளதே* என்று-தம்பெருமையைத் தாமுமறியாமே அவசமாகத் தெரிவித்துக் கொண்டதுபோல மணவாளமாமுனிகளும் உபதேசரத்தினமாலையில் ☼தன் குருவின் தாளிணைகள்தன்னில்☼ என்கிற பாட்டில் தம் பெருமையை அவசமாகவே தெரிவித்துக்கொண்டார். பாசுரம் வருமாறு—☼தன்குருவின் தாளிணைகள் தன்னில் அன்பொன்றில்லாதார், அன்பு தன்பால் செய்தாலும் அம்புயைகோன்—இன்பமிகு விண்ணாடு தானளிக்க வேண்டியிராறுதலால், நண்ணாரவர்கள் திருநாடு☼ என்பதாம். இதன்பொருளாவது, லக்ஷ்மீபதியான எம்பெருமான், தன்னாசாரியரிடத்திலே பக்தி செலுத்தாமல் தன்னிடத்தில் மட்டும் பக்தி செலுத்துமவர்களை ஆட்கொள்ளமாட்டான் என்பதாம். இங்குத் தன்குரு வென்பதற்கு எம்பெருமான்றன்னுடைய குரு என்று பொருளாம். அவனுடைய குரு-மணவாளமாமுனிகள்தாம். மாமுனிகள் பக்கலிலே பகைகொண்டவர்கள் எம்பெருமான் பக்கலிலே எத்தனையன்பு கொண்டாலும் பயனில்லை—என்றதாயிற்று. அந்தப்பகையின் பலனைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கண்டுவைத்துங்கூட, மேன்மேலும் மாச்சரியமே கொள்ளுமவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லுவோம். *கரந்துமிழ்ந்து கடந்திடந்தது கண்டும் தெளியகில்லீர்* என்கிற பாசுரத்தையே அநுஸந்தித்துநிற்போம்.

பிள்ளையுலகாசிரியர்பெருமை

☼ஐப்பசியில் திருவோணத் தவதரித்தவரான பிள்ளையுலகாசிரியரின் பெருமை வாசாமகோசரம். ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் முதலான பூருவா சாரியர்களிற்காட்டில் எம்பெருமானுர் பெருமை பெற்றுர். அப்பெருமையை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் ☼ஒராண்வழியாயுபதேசித் தார் முன்னோர், ஏராரெதிராசரின்னருளால்—பாருலகில், ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்.☼ என்று அருளிச் செய்கிறபடி உண்மையேயாயினும், அவ்வெம்பெருமானுர் ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தி வைக்கவில்லை. ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யமென்றும் தீபமென்றும் ஸாரமென்றும் மூன்று வியாக்யானங்கள் இட்டருளியிருந்தும் ரஹஸ்ய வ்யாக்கியானமாக ஒரு சிறுநூல்கூட இட்டருளவில்லை. ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யங்களில் ரஹஸ்யார்த்தங்கள் உட்புகுந்து அநுபவிக்கலாம்படி (ஆங்காங்கு) இருந்தாலும் தனிப்பட ரஹஸ்ய வியாக்கியானங்கள் ஸாதித்தருளாதது குறையே. அக்குறைதீரப் பிள்ளையுலகாசிரியர் அஷ்டாதச ரஹஸ்யங்களையருளிச்செய்து ஸம்க்ஷேப விஸ்தரங்களாலே உபயவேதாந்த ரஹஸ்ய திவ்யார்த்தங்களை நன்குவெளியிட்டருளிமஹோபகாரம் செய்தருளினர். *ஸர்வஜ்ஞலோககுருவென்று இவர்க்குத் திருநாமம். அது இவர்க்கேதகும்......

— இவருடைய தனியன் —

லோகாசார்யாய குரவேக்ருஷ்ணபாதஸ்யஸூநவே,
ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவாதவே நம:.

ஆனந்தஸூ கார்த்திகைமீ உத்ஸவாதிகள்.

1உ சனி மாதப்பிறப்பு *(16-11-74)*
2உ ஞா. திருமூலம்
5உ புதன் திருவோணம், நம்பிள்ளை யுத்ஸவாரம்பம். *(20—11—74)*
10உ திங். கைசிக ஏகாதசி நம்பிள்ளை 6.
13உ வி. அருளாளப்பெருமா ளெம்பெருமானுர்.
14உ வெள். திருக்கார்த்திகை. கலியன், நம்பிள்ளை சாத்துமுறை
15உ சனி. திருப்பாணுழ்வார் சாத்துமுறை
17உ திங். திருவாதிரை
27உ வி கார்த்திகையனுஷம் மஹோத்ஸவம்
30உ ஞாயி. பகற்பத்து தொடக்கம் திருமூலம் *(15—12—74)*

ஆனந்தஸூ மார்கழிமீ

1உ திங். திருப்பள்ளியெழுச்சி தொடக்கம்
3உ புத. திருவோணம் *(18—12—74)*
9உ செவ். பகற்பத்து சாற்றுமுறை
10உ புத. வைகுண்ட ஏகாதசி
19உ வெள். ஆழ்வார் திருவடிதொழுதல்
20உ சனி. ஆண்டாள் நீராட்டத்திருநாள் தொடக்கம், இயற்பாசாத்துமுறை
21உ ஞாயி. திருப்பல்லாண்டுதொடக்கம், தொண்டரடிப்பொடியாழ்வார் சாத்துமுறை
29உ திங். ஆண்டாள் திருக்கல்யாணம்.

அருளாளப்பெருமாளெம்பெருமானுர்

கார்த்திகைத் திங்களில் பரணி நக்ஷத்ரத்தில் திருவவதரித்தவரிவர். (யஜ்ஞமூர்த்தியென்று முன் திருநாமம்.) இவர் எம்பெருமானுரோடு பதினெட்டு நாள் வாதப்போர் நடத்தித் திருவடிபணிந்தவராதலால் ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில் ஒப்புயர்வற்ற பாண்டித்யம் பெற்றவரென்பதில் ஐயமில்லை. அப்படி மஹாவித்வானுன இவர்க்கு வடமொழியில் நூல்களெழுதத் தோன்றவில்லை. ஸ்ரீபாஷ்யத்திற்குப் பெரிய வியாக்கியானமருளி யிருக்கலாம். ஆனல் ஞானஸாரம், பிரமேயஸாரம் என்கிற இரண்டு தமிழ் (வெண்பா) நூல்களையருளிச் செய்தார். எம்பெருமானுர் திருவடிவாரத்தில் தாம் கேட்ட மஹார்த்தங்களை இவ்விரண்டு நூல்களிலும் பொறித்து வைத்துள்ளார். அவை ஆழ்ந்து அநுபவிக்கத் தக்கவை. இவற்றுக்கு அடியேனும் உரையிட்டிருக்கிறேன். ... ...

நம்பிள்ளை வைபவச் சுருக்கம்

கார்த்திகைத் திங்கள் க்ருத்திகா நக்ஷத்திரத்தில் (திருமங்கையாழ்வாரவதரித்த நன்னுளில்) திருவவதரித்து, திருக்கலிகன்றிதாஸரென்று திருநாமம் பூண்டிருந்து, நஞ்சீயர் பேரருளால் நம்பிள்ளையென வழங்கப்பெற்றவர். பெரிய திருமொழியில் (5-8-7.) *ஓதுவாய்மையுமென்கிற பாட்டின் வியாக்கியானத்திலே பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்துள்ளவொரு வாக்கியமே போதும் நம்பிள்ளையின் பிரபாவத்தை யறிவதற்கு. அந்த வாக்கியமாவது—

''முற்பட த்வயத்தைக்கேட்டு இதிஹாஸ புராணங்களையுமதிகரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாய மீமாம்ஸைகளு மதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம் நம் பிள்ளையைப் போலே..............'' என்பது.

மார்கழித்திங்களின் ஏற்றம் திருப்பாவையினுல்

''பாதகங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும்–கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாதமானிடரை
வையஞ் சுமப்பதும் வம்பு.''

ஆண்டாளருளிச் செய்த திருப்பாவை யானது வேதங்களுக்கெல்லாம் வித்து என்ருல் திருப்பாவையிலிருந்தே வேதங்களெல்லாம் தோன்றினதாகப் பொருள்படுகிறதே, இஃது உண்மை யாகுமோ? அநாதிஸித்தமான வேதங்கள் திருப்பாவையிலிருந்து தோன்றினவை யென்று சொல்லலாகுமோ? என்று சங்கிக்க நேரும். கேண்மின்; *வேதமனைத்துக்கும் வித்து என்று (ஓங்காரமாகிற) ப்ரணவத்தைச் சொல்லுகிறது. அதுபோன்றது திருப்பாவை என்றபடி. பிரணவத்தில் எப்படி ஸகலார்த்தங்களும் அடங்கியுள்ளனவோ, அப்படியே திருப்பாவையில் எல்லாப் பொருள்களும் அடங்கியுள்ளன வென்கை. அதனுலே எம்பெருமானுர் திருப்பாவைஜீயரானர்.

அத்யேதாக்களும் அத்யாபகர்களும்

வடமொழி வேதத்தைப் பூர்த்தியாக ஓதினவர்களை அத்யேதாக்களென்கிறோம். தமிழ் வேதத்தில் சிலர் திருப்பாவைமட்டும் ஓதியிருந்தாலும் அவர்களை அத்யாபகர்களென்கிறோம். அத்யேதா என்பதற்கு மாணுக்கனென்று பொருள். அத்யாபகரென்பதற்கு உபாத்யாயரென்று பொருள். மாணுக்கனென்பது தாழ்வான பெயர். உபாத்யாயரென்பது உயர்ந்த பெயர். இந்தவாசி எதனல் விளைந்ததென்று விமர்சிக்கவேணும். பட்டரருளிச்செய்த *நீலாதுங்கஸ்தநகிரி தடீஸுப்தம்* ததாம். இதில் *ஸுப்தம் க்ருஷ்ணம் உத்போத்ய அத்யாபயந்தீ* என்றதுமருமமான ஸ்ரீஸூக்தி. இரவில் உறங்கிப்போனமாணுக்கனை யுணர்த்தி வேதம்சந்தை சொல்லிக்கொடுப்பர் உபாத்யாயர்; அதுபோல *நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பனுய் ஸுப்தனுயிருந்த கண்ணபிரானை எழுப்பி *பொருள் கேளாய்* என்று அத்யாபநம் பண்ணி வைத்தாள் ஆண்டாள். அதையிட்டு *அத்யாபயந்தீ* என்றார் பட்டர். மலர்மார்பா! எழுந்திராய்* என்னுதே *வாய்திறவாய்* என்றதின் ஸ்வாரஸ்யமுணரத்தக்கது. உபாத்யாயர் சொல்லிக்கொடுத்தால் சிஷ்யன் வாயைத் திறக்கவேணுமே. கண்ணன் அர்ஜுநனுக்குக் கீதை சொல்லும்போது அவன் அவதானமின்றிக்கே யிருக்க *பூய ஏவ மஹாபாஹோ! ச்ருணு மே பரமம் வச:* என்றாற்போலே ஆண்டாள் தன் கீதையை அவனுக்குச் சொல்லும்போது

☆பொருள் கேளாய்☆ என்ருள். அர்ஜுநனுக்குக் காதால் கேட்கவேண்டிய காரியம்மட்டுமே யிருந்தது. ஆண்டாளுடையசிஷ்யனுன கண்ணன் அநுஷ்டானமும் பண்ணவேண்டி யிருந்தமையால் ☆வாய்திறவாய்* என்றும் சொல்லவேண்டியதாயிற்று. வடமொழி வேதமோதுவிப்பவர்கள் சப்தராசியை மட்டுமே ஓதுவிக்கின்ருர்கள். பொருள் சொல்லிக்கொடுப்பதில்லை; ஆண்டாளோவென்னில் க்ருஷ்ணனுகிற அந்தேவாஸிக்குப் ☆பொருள் கேளாய்☆ என்று அர்த்தமும் சொல்லிக்கொடுத்தாள். ஆக, ஆண்டாள் பரிகரமான செந்தமிழ் வேதியர்க்கு அத்யாபகரென்றபெயர் வழங்கிவருவதானது மிக ஏற்கும். ... *

ஆனந்தஹ்ஸ தைமீ உத்ஸவாதி விசேஷங்கள்:

1உ செவ். மகர ஸங்க்ரமணம்.
ஊர்கோலம் (14—1—75) திருவோணம்
2உ புதன். சீவரம் பார்வேட்டை.
10உ வியா. நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
11உ வெள்ளி. ஏகாதசி, ரோஹிணி.
12உ சனி. திருவாதிரை,
14உ தி. இன்றுமுதல்3நாள்தெப்பவுத்ஸவம்
16உ புதன். தையில் மகத்திருநாள், திருமழிசையாழ்வார் பைந்நாகம்பாய்சுருட்டி
19உ சனி கூரத்தாழ்வான் சாத்துமுறை.
22உ செவ். திருவிசாகம். (1—2—75)
24உ வியா. ஏகாதசி.
25உ வெள். திருமூலம் (7—2—75)
28உ திங். திருவோணம். (10—2—75)
30உ பு. மாசிமாதப்பிறப்பு

தைமாதத்திற்கு ஏற்றம் திருமழிசைப் பிரானும் கூரத்தாழ்வானும்

திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில் (பார்வதீ பரமேச்வரர்களைப் பற்றி) அபூர்வமான தோர் இதிஹாஸமருளிச்செய்கிறார். (பா. 78) *கண்டு வணங்கினார்க்கு என்னுங் கொல்?, காமனுடல் கொண்ட தவத்தார்க்கு உமையுணர்த்த—வண்டலம்புந் தாரலங்கல் நீண்முடியான் தன்பெயரே கேட்டிருந்து, அங்காரலங்கலானமையாலாய்ந்து* (இப்பாட்டின்கருத்தாவது.) ஒருநாள் பரமசிவன் கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் அமர்ந்திருக்கக் கண்ட பார்வதீதேவியானவள் கணவனைநோக்கிக்கேட்டாள் 'உலகமெல்லாம் உம்மைப் பரதெய்வமாக உபாஸியா நிற்க நீர் யாரை உபாஸிக்கிறீர்? உமக்கும் உபாஸ்யமாக ஒரு தேவதையுண்டோ?' என்று. இங்ஙனம் கேட்டவாறே 'இராமனை உபாஸிக்கிறேன்' என்று சொல்லவேண்டி அது சொல்லுவதற்குள்ளேயே *காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்* *உள்ளெலாமுருகிக் குரல்தழுத் தொழிந்தேன் உடம்பெலாங் கண்ணநீர்சோர* என்னும்படியான ஆழ்வார் நிலைமையை யெய்திவிட்டார் முக்கண்ணப்பர். அந்த இராமபிரானை நேரில் ஸாக்ஷாத்கரித்தவர்கள் என்னபாடு பட்டிருப்பர்களோ! என்கிறார் திருமழிசைப்பிரான். (இப்பாட்டிற்கு அடியேனுடைய திவ்யார்த்ததீபிகை யுரையில் விரிவான விவரணம் காண்க.) பரமசிவனைப் பார்வதி கேட்கும் சுலோகம்-*கம் த்வம் மந்த்ரயஸே தேவ! கிம் தைவமதிகம் தவ? ஜபஹோமநமஸ்காரை:

தம் வதஸ்வ மஹேச்வர!* என்பதாம். இஃதிருக்கட்டும். ஸஹஸ்ரநாமாத்யாயத்தில், [பார்வத்யுவாச— பரமேச்வர உவாச] என்பவை ப்ரஸித்தமானவை. *ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே!, ஸஹஸ்ரநாமதத்துல்யம் ராமநாம வராநநே!* என்று பரமசிவன் சொன்னதை கோஷிக்கிறார்கள்; அந்த ராமன் ஸாக்ஷாந்நாராயணன் என்பதையும் அறிந்திருக்கிறார்கள்; அறிந்துவைத்தும் அந்தோ! ☼யஸ் து நாராயணம் த்வேஷ்டி☼ என்ற வசனத்திற்கு இலக்காகின்றார்களே! என்று வருந்துகிறோம். அந்தோ! தலைவிதி!.

கூரத்தாழ்வான் பெருமை

☼மொழியைக் கடக்கும் பெரும்புகழான், வஞ்ச முக்குறும்பாங்குழியைக்கடக்கும் நங்கூரத்தாழ்வான்* என்று திருவரங்கத்தமுதனாரும், ☼வாசாமகோசர மஹாகுணதேசிகாக்ர்ய கூராதிநாத.........* என்று மணவாளமாமுனிகளும் கையொழிந்த கூரத்தாழ்வான் பெருமையை யாரேகூறவல்லார்? இவர்பெருமையை இவரதுதனியனே விளக்கிநிற்கும். ☼ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரேப்யோ நமஉக்திமதீமஹே, யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்தி மங்கலஸூத்ரதாம்☼ என்பது பட்டரருளிச்செய்த ஆழ்வான்தனியன். இதில் உத்தரார்த்தம் என்ன தெரிவிக்கின்றதென்றால்,ஆழ்வான் ஸ்ரீஸூக்திகள் அருளிச்செய்யாதிருந்தால் வேதமெல்லாம் மங்கல ஸூத்ரமில்லாத மாதரைப் போன்றிருக்குமென்கிறது. மாதர்க்கு மங்களஸூத்ரமில்

8

லாத நிலைமைகள் இரண்டு; கன்னிகைப் பருவமும் விதவைப்பருவமும். கன்னிகைப் பருவத்தில் பல ஆண்கள் தங்களைக் கணவர்களாக ஆசைப்பட்டிருப்பர்கள். விதவைப் பருவத்தில் 'கணவன் இல்லை' என்றாகும். அதுபோல, ஆழ்வானுடைய ஸ்ரீஸூக்தி அவதரியாவிடில்பலபலதெய்வங்களுள்ளனவென்றும் தெய்வமேயில்லையென்றும் குத்ஸிதவாதங்கள் தலைவிரித்தாடும். அதற்கு ஈஷத்தும் அவகாசமில்லாதபடி செய்துவைத்தவை ஆழ்வான் ஸ்ரீஸூக்திகளேயாம், வேதமாதுக்குத் தாலிகட்டினவர் கூரத்தாழ்வான் என்றதாயிற்று ☼அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜ த்வந்த்வமாச்ரித்ய, பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:, ஸோயம்ராமாநுஜ முநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம் யத்ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூரநாத:! ☼ என்கிற ச்லோகமும் ஆழ்வானுடைய ஒப்புயர்வற்ற பெருமையைக்காட்டும். இந்தச்லோகத்திற்குநம் உரைகாண்க.

மாசிமீ உத்ஸவாதிகள்.

9௨ செவ். ரதஸப்தமி. (18—2—75)
7௨ புதன். நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
9௨ வெள். திருக்கச்சிநம்பிகள்,
தென்னேரித் தெப்பத்திருநாள்.
11௨ ஞா. குலசேகராழ்வார். (23—2—75)
14௨ புதன் ராய்ஜீகுளத் தெப்பம்.
15௨ வியா. முதல் 3நாள் தவனவுத்ஸவம்

19௳ தி. திருவிசாகம் (3—3—75)
22௳ வி. திருமூலம். (6—3—75)
24௳ சனி ஏகாதசி. (8—3—75)
26௳ திங். திருவோணம். (10—3—75)
28௳ புதன் அமாவாஸ்யை. (12—3—75)
30௳ வெள். பங்குனிமாதப்பிறப்பு.

மாசிமாதத்தில் குலசேகராழ்வாரநுபவமும் திருக்கச்சிநம்பிகளநுபவமும் சிறக்கும்

குலசேகராழ்வார் மாசிப் புனர்பூசமெனும் நன்னாளில் அவதரித்தார். இவருடைய அருளிச்செயலான பெருமாள் திருமொழியில் இன்னமுதமான பாசுரம் ☼அரசமர்ந்தானடிசூடுமரசையல்லால் அரசாக வெண்ணேன் மற்றரசுதானே☼ என்பது என் மனத்திற்பட்டது. தசரத மன்னவன் வனம்புக்க மகனைநோக்கி ☼நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே!☼ என்றது மற்று யாரும் சொல்லாத சொல்லாகும். ☼வா போகு வா இன்னம்வந்தொருகால் கண்டுபோ☼ என்று இராமனை நோக்கித் தயரதன் கூறுவதாக ஒருபாசுரம் பெருமாள் திருமொழியில் (9-4). ☼வா போகு வா இன்னம் வந்தொருகால் கண்டுபோ☼ என்பது அற்புதமான அநுபவம். சக்ரவர்த்தி இராமனை வா என்றழைப்பனும்; உடனே அவன் வருவன்; வந்தவுடனே 'ராமா! போ' என்பனும் மன்னவன். இராமன் உடனே போய்விடுவன். மறுபடியும் சக்ரவர்த்தி 'ராமா! வா' என்பனும். உடனே இராமன் திரும்பிவருவன்.

இப்படி வாவென்பதும் போவென்பதுமாகப் பன்முறையும் நடைபெறும். அப்பா! எதற்காக வரச் சொல்லுகிருய்? எதற்காகப் போகச்சொல்லுகிருய்? என்று கேளான் இராமன். *வாபோகுவாபோகு என்று சொல்லுகிற சக்ரவர்த்தியின் கருத்து யாதெனில், முன்னழகைக் காண்பதற்கு வா வென்பன். அது கண்டவாறே பின்னழகைக் காண்பதற்குப் போவென்பன். ☼முன்னிலும் பின்னழகிய பெருமாளன்ரே. மறுபடியும் முன்னழகு காணவேண்டி வா வென்பன். எத்தனை தடவை கண்டாலும் சக்ரவர்த்திக்கு த்ருப்தி பிறவாது. வால்மீகி பகவான் *நததர்ப்பஸமாயாந்தபபச்யமாநோநராதிப:☼என்ருர்.

திருக்கச்சிநம்பிகளாறுவார்த்தை

மாசி மிருகசீர்ஷத்தில் அவதரித்தவர் திருக்கச்சி நம்பிகள். இவர்க்கு ☼ராமாநுஜமுநேர் மாந்யம்* என்கிற விசேஷணம் அற்புதமானது. இவர் தேவப் பெருமாளிடம் ஆறு வார்த்தைகள் பெற்று உடையவர்க்கு உரைத்தாரென்பது இவருடைய ஏற்றத்தைக் காட்டும். ☼ஸ்ரீ காஞ்சிபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே, அதீதார்ச்சா வ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்☼ என்றருளிச்செய்தார் மணவாளமாமுனிகளும். ஆறுவார்த்தைகளாவன–☼அஹமேவ பரம் தத்வம் தர்சநம் பேத ஏவ ச, மோக்ஷோபாய: ப்ரபத்திஸ் ஸ்யாத் பூர்ணசார்ய ஸமாச்ரய:. தேஹாவஸாநே முக்திஸ் ஸ்யாத் அந்திமஸ்ம்ருதி வர்ஜநம்☼, இதையடியொற்றி வடிவழகியநம்பி தாஸர் பணித்த பாசுரங்கள் இரண்டு—

"செப்புகின்ற பரதத்வம் யானேயென்னச் செப்புதி, வே-
றெப்பிலாதாய்! தரிசனமும் பேதமென்றே யுரைத்திடுக
தப்பிலாதவுபாயமதும் ப்ரபத்தி யென்றே சாற்றிடுக
அப்ப! புகல்க இவையன்றி நினைவும் வேண்டா அந்திமத்தில்

இந்தச்சரீர அவசானந்தன்னிலிசையும் மோக்கமது
அந்தமில்லாக் குணத்தினனுக்கு ஆசாரியனும் பெரியநம்பி
சிந்தைதன்னுளிவை யெல்லாம் சிந்தித்திருந்தானிளையாழ்வான்
முந்தியிவை நீமொழியென்று மொழிந்தருள்வா னருளாளன்."

ஆனந்தஸூ பங்குனிமீ உத்ஸவாதிகள்.

4உ செவ். கிருத்திகை, நம்பிள்ளை (18—3—75)

7 உவெள்ளிமுதல் 7 நாள் பங்குனி யுத்தரத் திருநாள்.

14உ வெள். ஊர்கோலம்.

17உ திங். முதல் 7 நாள் பல்லவோத்ஸவம்.

,, ,, திருவிசாகம்.

20உ வியா. திருமூலம். (3—4—75)

24உ திங். ஏகாதசி. (7—4—75)

27உ வியா. உடையார்பாளையம்.

28உ வெள். அமாவாஸ்யை. (11—4—75)

29உ சனி. ஸம்வத்ஸராதி. (12—4—75)

பங்குனிமாதத்திற்குச் சிறப்பு
பெரியபிராட்டியாரால்

பங்குனியுத்தரம் பெரிய பிராட்டியாருடைய திருநக்ஷத்ரமென்று கொண்டாடிவருகிறோம்' பெரிய பிராட்டியாருடைய பெருமைகளை ஆளவந்தாரருளிய சதுச்ச்லோகிகொண்டும், எம்பெருமானாரருளிய ✡பகவந்நாராயணேத்யாதி சூர்ணிகை கொண்டும், ஆழ்வானருளிய ஸ்ரீஸ்தவங்கொண்டும், பட்டரருளிய ஸ்ரீகுணரத்னகோசங்கொண்டும், தேசிகனருளிய ஸ்ரீஸ்துதிகொண்டும் அநுபவிக்கப் ப்ராப்தம். சுருங்க அநுபவிக்க விரும்பினல், சதுச்ச்லோகீபாஷ்யத்தில் *அஸ்தி கர்மார்ஹபலதே பத்யௌ க்ருத்யத்வயம் ச்ரிய:, நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே✡ என்று தேசிகனருளிய காரிகைகொண்டு அநுபவிப்பது' (இதன் கருத்தாவது) அவரவர்களின் செயல்களுக்குத் தக்கவாறு பலனளிப்பவன் ச்ரிய: பதியே; பிராட்டி செய்வதென்னென்னில்; நிரங்குச ஸ்வதந்த்ரனுன அப்பெருமான் நிக்ரஹிக்க நினைக்குமளவில் அதைத் தவிர்ப்பதும், அவன் அநுக்ரஹிக்க நினைக்குமளவில் அதை மேன்மேலும் வளரச்செய்வதுமேயாம் என்றபடி. ஆளவந்தார் முதலான ஸகல ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திஸாரம் இதுவேயாம்.. *

இங்ஙனம்: *P. B. A.*

ஶ்ரீ:

அன்பர்களுக்கு
விண்ணப்பம்.

பேரருளாளன் திருவருளால் இந்த பூஷணம் வெளிவருகின்றது. ஐப்பசிமீ முதலாகப் பங்குனிமீ வரையில் ஆறு மாதங்களில் அநுபவிக்கவேண்டிய ஸத்விஷயங்கள் சுருக்கமாக இதில் விஜ்ஞாபிக்கப்பட்டுள்ளன. பக்தர்கள் தினப்படியாக இதனையநுபவித்து இன்புறவேணும். வருகிற சித்திரைமீ முதல் புரட்டாசிமீ வரையில் ஆறுமாதங்களில் இதேவிதமாக அனுபவிக்கவேண்டிய ஸத்விஷயங்கள்கொண்ட ஹஸ்தபூஷணம் பங்குனிவிசாகத்தன்று வெளியிடப்படும். அதில் பல திவ்யதேசங்களினுடையவும் பலபெரியார்களினுடையவும் படங்களைப் பதிப்பிக்க மிக்க ஆசையுள்ளது, நண்பர்களுக்கு வேண்டுகோள் வரும். அவரவர்கள் அன்புடன் உருவப்படங்களை உபகரிக்கவேணும்.

இங்ஙனம்.

P. B. அண்ணங்கராசாரியர்.